**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்</u>**.52/2024

பெயர்–திரு.இளங்கோவன் நாள்.25.02.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

தாவா சொத்தானது கா.ச.எண்.34/1 ல் 30 செண்ட் 35/1Aல் 20 செண்ட் ஆக மொத்தம் 50 செண்ட் ஆகும். தாவா சொத்து எனக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டது, தாவா சொத்தானது நிபந்தனை பட்டாவில் உள்ளது. நிபந்தனை பட்டா வாய்க்கால் தொடர்பான பயன்பாட்டிற்கான நிபந்தனை பட்டாவாக வழங்கப்பட்டது. மேற்படி நிபந்தனை பட்டாவை நான் வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி நிபந்தனை பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நிபந்தனை பட்டா விபரங்களை பிரதிவாதியிடம் தாவாசொத்தை குத்தகைக்கு விடும் போது சொல்லியுள்ளேன். குத்தகை ஆவணத்தில் நிபந்தனை பட்டா குறித்து எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் குத்தகை பத்திரத்தில் நிபந்தனை பட்டா குறித்த விபரம் எழுதப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு நிபந்தனை பட்டா என்ற விபரம் பற்றி வேண்டுமென்றே குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது கிரைய ஆவணம் பிரதிவாதி வசம் உள்ளது. பிரதிவாதிக்கு நான் 21.05.2018ல் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் நிபந்தனை பட்டா என குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆமாம். வழக்கறிஞர் அறிவிப்பில் நிபந்தனை பட்டா பற்றி குறிப்பிடாமல் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கில் தாவா சொத்து நிபந்தனை பட்டாவிற்குரியது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நிபந்தனை பட்டா பற்றி குறிப்பிடாமல் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஒரு மாத்தில் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். பிரதிவாதி 2018ல் பதில் அறிவிப்பு கொடுத்த பிறகு 2024 வரை வழக்கு தாக்கல் செய்யாமல் இருந்ததற்கு என்ன காரணம் என்றால் கொரோனா காலமாக இருந்தது மற்றும் எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் 2024 வரை வழக்கு தாக்கல் செய்ய இயலவில்லை. மேற்படி விபரத்தை வழக்குரையில் கூறவில்லை என்றால் சரியல்ல. நிபந்தனை பட்டாவை அயன் பட்டாவாக 2019ம் ஆண்டு மாற்றினேன். பதில் அறிவிப்பு பிரதிவாதி அனுப்பிய பின்பா என்றால் இல்லை குத்தகை காலம் முடிந்த பிறகு அயன் பட்டாவாக மாற்றினேன். பிரதிவாதி பதில் அறிவிப்பில் தாவா சொத்து நிபந்தனை பட்டா என பதில் கொடுத்ததால் தான் அதன் பின்னிட்டு அயன் பட்டாவாக மாற்றினேன் என்றால் சரியல்ல. நான் 2019க்கு முன்பாகவே அயன் பட்டா கேட்டு மனு கொடுத்துவிட்டேன்.

அதற்குண்டான மனுவின் நகலை ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 அயன் பட்டாவாக மாற்ற நான் கொடுத்த மனு என்றால் சரிதான். அதில் மனு கொடுத்த நாள் 06.2019 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி பதில் அறிவிப்பு 14.06.2018ல் அனுப்பிய பிறகு ஒரு வருடம் கழித்து 2019 ஜுன் மாதத்தில் அயன் பட்டாவாக மாற்ற நான் மனு கொடுத்திருக்கிறேன் என்றால் சரிதான்.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.02.25 15:05:09 +0530

District Munsif